செ. கு. எண்: 242 நாள் : 09.09.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 9.9.2013

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் போது விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ரோசனை பகுதியைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவர் 10.8.2013 அன்றும்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சாக்கோட்டையைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மனைவி திருமதி பவுனம்மாள் 11.8.2013 அன்றும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரத்தைச் சேர்ந்த திரு. பரமசிவம் என்பவரின் மகன் அருள்பாண்டி 29.8.2013 அன்றும் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், குறிஞ்சிபாடி வட்டம், பெருமாத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவர் 16.8.2013 அன்றும்;

விருதுநகர் மாவட்டம், கோவிந்தநல்லூர் உட்கடை, வாடியூரைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் சின்ன சடாச்சரம்;

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சேடப்பட்டியைச் சேர்ந்த திரு. சுந்தரபாண்டி என்பவரின் மகன் சுந்தரம்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மாதர்பாக்கம் குறுவட்டம், நேமலூர் மதுரா சின்ன பொம்மாச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மனைவி திருமதி கெங்கம்மாள் ஆகியோர் 29.8.2013 அன்றும்;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்ன ஓடைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியசாமி;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குறவர்குளத்தைச் சேர்ந்த திரு. சிவன்பாண்டி என்பவரின் மகன் துரைப்பாண்டி ஆகியோர் 31.8.2013 அன்றும் இடி, மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரத்தைச் சேர்ந்த திரு. பரமசிவம் என்பவரின் மகன் திரு. தங்கப்பாண்டி 29.8.2013 அன்று வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்துள்ளார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்த திரு. தங்கப்பாண்டிக்கு 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9